# INTERNATIONAL COMMISSION OF JURISTS

Commission internationale de juristes - Comisión Internacional de Juristas

*" dedicated since 1952 to the primacy, coherence and implementation of international law and principles that advance human rights "*

# சர்வதேச நீதிவல்லுநர்களின் ஆணையம்

## பத்திரிகை அறிக்கை

P R E S S R E L E A S E

21 நவம்பர் 2006
ஜெனீவா

சர்வதேச நீதிவல்லுநர்களின் ஆணையம் (ச.நீ.ஆ) இலங்கையில் மூதூர் பிரதேசத்தில் ஆவணி 2006 இல் கொல்லப்பட்ட ஆக்ஷன் பாம் மனிதாபிமான தொண்டர் நிறுவன *(Actiona Internationale Contre la Faim – ACF)* ஊழியர்கள் 17 பேரினது படுகொலை தொடர்பான விசாரணையை நாளைமுதல் அவதானிக்கத் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

ச.நீ.ஆணையத்தின் அவதானிப்பாளர், மைக்கேல் போர்ன்பெம் (குவின்ஸ் கவுன்சில்) அவர்கள், இவ்விசாரணை சர்வதேச தரத்திற்கமைய மேற்கொள்ளப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பார்.

இலங்கையரான 17 தொண்டர் நிறுவன ஊழியர்களின் மரண தண்டனைப் பாணியிலான படுகொலைக்கான காரணத்தையும், அதற்குப் பொறுப்பானவர்களை அடையாளங் காண்பதிலும், அவர்கள்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குமுரிய முதலாவது படியாக இவ்விசாரணைகளை அவதானிப்பதென்பது மேற்கொள்ளப்படவேண்டும் என்று ச.நீ.ஆணையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சாட்சிகள் உயிர்ப்பயமின்றி பாதுகாப்புடன் இருப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடைமுறை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ச.நீ.ஆணையம் இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் முன்வைத்துள்ளது. வழக்குடன் தொடர்புடைய சாட்சியங்களை வழங்க இச்சந்தர்ப்பத்தில் சாட்சிகள் முன்வருவதற்குத் தேவையான பாதுகாப்பிருப்பது மிகவும் பிரதானமானதாகும்

பின்னணி

திரு. மைக்கேல் போர்ன்பெம் (குவின்ஸ் கவுன்சில்) அவர்கள், 35 வருடங்களுக்கு மேலாக குற்றவியல் வழக்கறிஞராக உள்நாட்டிலும், சர்வதேசரீதியிலும் வாதப், பிரதிவாதங்களில் ஈடுபடுபவராவார். கிட்டத்தட்ட 15 வருடங்களாக அவர் பதில் நீதவானாகவும் இருந்துவருகிறார். திரு. மைக்கேல் போர்ன்பெம் (குவின்ஸ் கவுன்சில்) அவர்கள் நைஜீரியா, சியேரா லியோன் ஆகிய நாடுகளில் பூர்வாங்க நீதி விசாரணைகளை நடத்தியுள்ளதோடு அமெரிக்கா, இந்தியா, ஹொங்கொங், மலேசியா, சியேரா லியோன் மற்றும் நைஜீரியா உட்பட பல நாடுகளில் இடம்பெற்ற பல வழக்குகளின்போது எண்ணற்ற கருத்தாய்வுகளையும் மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரைகளையும் எழுதியுள்ளார். அவர் கரிபியன் சட்ட ஆலோசனைச் சபையின் நீதிக் குழுமத்திற்கு மேன்முறையீடு செய்யும் பிரதிவாதிகளுக்காக அடிக்கடி வாதிடுவதுண்டு.

மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து லைலா கரிமி *(Laila Karimi)*யைத் தொடர்பு கொள்ளவும். +4176 448 8738 அல்லது +4122 979 3800.

The ICJ is an international non-governmental organisation comprising sixty
of the world's most eminent jurists and has a worldwide network of national sections and affiliated organisations

33, rue des Bains, P.O. Box 91, 1211 Geneva 8, Switzerland
Tel: +41(0) 22 979 3800 – Fax: +41(0) 22 979 3801 – Website: http://www.icj.org - E-mail: info@icj.org